**10.02.2025**

அ.வ.எண். **274/2012**

<u>பி.சா.**2** அய்யப்பன் அவர்களின் குறுக்கு விசாரணை</u>

1. நான் சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை. பிரதிவாதி தான் என்னை அழைத்து வந்தார். பிரதிவாதி எனது உறவினரா என்றால் எனது ஊர்க்காரரர். நான் 1982ம் வருடம் பிறந்தேன். எனக்கு தற்போது 40 வயதாகிறது என்றால் சரிதான். தாவா சொத்து எங்குள்ளது என்று எனக்கு தெரியும். தாவா சொத்து குறித்து எப்போதிலிருந்து எனக்கு தெரியும் என்றால் எனக்கு 15 வயதிலிருந்து தெரியும். அதற்கு முன்பு தாவா சொத்தினை யார் அனுபவித்து வந்தார் என்பது குறித்து எனக்கு தெரியாது.

**2.** தாவா சொத்தின் விஸ்தீரணம் 133 சென்ட். சர்வே எண் 15/1பி4 மற்றும் 15/1பி 3 இரண்டையும் சேர்த்து சுமார் 2 ½ ஏக்கர் இருக்கும் என்றால் சரிதான். மேற்படி இரண்டு சொத்தும் வரப்பு இல்லாமல் ஒன்றாகதான் உள்ளது என்றால் சாிதான். மேற்படி இரண்டு சா்வே எண்களும் தற்பொழுது கரம்பாக உள்ளது என்றால் சாிதான். சா்வே எண் 15/1பி 4 பிரதிவாதிக்கு சொந்தமான சொத்து என்பதற்கான ஆவணம் ஏதேனும்

பார்த்தேனா என்றால் இல்லை. எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள ஆவணத்தினை பதிவு செய்யும் போது நான் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு செல்லவில்லை என்றாலும் அந்த ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான்.

3. 17.03.2010 தேதியிட்ட ஆவணம் குறித்து எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் 2010ல் தெரியும். 2010ம் வருடம் பிரதிவாதி கிரையம் வாங்குவதற்கு முன்பு வாதி கிரையம் வாங்கிய விவரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் வாதி கிரையம் வாங்கியது குறித்து எனக்கு தெரியாது. தாவா சொத்து சம்மந்தமாக வில்லங்கம் ஏதேனும் பார்த்தேனா என்றால் இல்லை. தாவா சொத்திற்கான பட்டா தற்பொழுது யார் பெயரில் உள்ளது என்று தெரியாது. சிட்டா அடங்கல் யார் பெயரில் உள்ளது என்று தெரியாது.

4. பிரதிவாதி கிரையம் வாங்குவதற்கு முன்பு தாவா சொத்திற்கான பட்டா யார் பெயரில் இருந்து என்று எனக்கு தெரியாது. தாவா சொத்து நீர்பிடிப்பு பகுதியில் உள்ளது என்றால் சரிதான். இன்றைய தேதியிலும் தாவா சொத்து ஒரு அடி ஆழத்திற்கு தண்ணீர் தேங்கும் என்றால் சரிதான். ஒரு அடி

ஆழத்தில் தண்ணீர் தேங்கும் போது அதில் பயிர் வைக்க முடியாது என்றால் சரிதான். எனவே எனது பிரமாண வாக்குமூலத்தில் தாவா சொத்து பிரதிவாதியின் அனுபவத்திலும் ஆளுகையிலும் உள்ளது என்று நான் சொல்லியது தவறு என்றால் சரியல்ல. சில சமயம் அவர் பயிர் வைத்ததை நான் பார்த்துள்ளேன். என்ன பயிர் வைத்தார் என்றால் நெல்.

5. தாவா சொத்து நீர் நிலை சொத்து என்றாலும் அதில் நெற்பயிர் வைக்க முடியாது என்றாலும் நான் தற்பொழுது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மத்தேயு மகன் ஞானக்கண்ணு என்பவரை சிறு வயதிலிருந்தே எனக்கு தெரியும். மத்தேயு மகன் ஞானக்கண்ணு தாவா சொத்தினை அனுபவித்ததற்கான ஆவணம் ஏதேனும் பார்த்துள்ளேனா என்றால் இல்லை.

6. வாதி 2009ம் வருடத்தில் தாவா சொத்தினை கிரையம் வாங்கிவிட்டார் என்றாலும் அதனை தெரிந்து கொண்டே பிரதிவாதி கிரையம் வாங்கியது தவறு என்றாலும் அதன் முன்னிலைக்கு தாவா சொத்தில் பிரதிவாதி உரிமை கோரமுடியாது என்றாலும் அவருக்காக நான் சாட்சியம் அளிப்பது ஏற்புடையது அல்ல என்றாலும் சரியல்ல. பிரதிவாதி

எனது ஊா்க்காரா் என்பதால் அவருக்கு பவ்யப்பட்டு பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சாியல்ல.